## புதுச்சேரி அரசு
## பள்ளிக் கல்வி இயக்ககம்
## ஜவகர் சிறுவர் இல்லம்
## மாநில சிறந்த படைப்பாளிக் குழந்தை விருது - *2021*

எண்: 50 /பகஇ/ ஜசிஇ/2022.

**28.12.2022**

புதுச்சேரி அரசின் பள்ளிக் கல்வி இயக்ககம் ஜவகர் சிறுவர் இல்லம் மூலம் ஆண்டுதோறும் சிறந்த படைப்பாளிக் குழந்தை விருதுகளை வழங்கி வருகிறது. இவ்விருதுக்கான மாநில அளவிலான போட்டிகள் கீழ்க்கண்ட நெறிமுறைகளுக்கிணங்க நடத்தப்படவுள்ளன.

| | |
|---|---|
| மாநில சிறந்த படைப்பாளிக் குழந்தை விருது | ரூ.5000/-ரொக்கம், பாராட்டிதழ் மற்றும் நினைவு பரிசு |
| எண்ணிக்கை | 16- அட்டவணை இனத்தவர்-1,உடல் ஊனமுற்றோர்-1, காரைக்கால்-2, மாகி-1, ஏனாம்-1, புதுச்சேரி- 10 (நகரம்-5, கிராமம்-5) |
| வயது மற்றும் தகுதிகள் | 1.04.2021 அன்று 9 முதல் 16 வயது வரை உள்ள புதுச்சேரி மாநிலத்தில் பயிலும் அரசு மற்றும் தனியார் பள்ளிக் குழந்தைகள் (கலந்து கொள்பவர்கள் 1.4.2005 மற்றும் 1.4.2012 ஆகிய தேதிகளுக்கிடையில் பிறந்தவராக இருத்தல் வேண்டும்)<br>**குறிப்பு: 2021 ம் ஆண்டு விருதுக்கு தகுதி இருப்பின் இப்போது கல்லூரியில் பயின்றாலும் முன்பு 2020-21 கல்வி ஆண்டில் விண்ணப்பதரர் படித்த பள்ளயில் பயின்றதற்கான சான்றிதழ் உடன் ( Study Certificate) அப்பள்ளியின் மூலமாக மட்டுமே விருதுக்கு விண்ணப்பிக்கலாம்** |

| விருதுக்கான களம் | உட்பிரிவு |
|---|---|
| படைப்பாற்றல் நிகழ்கலை<br>அ) நடனம்<br>ஆ) வாய்ப்பாட்டு<br>இ) இசைக்கருவி மீட்டல் | <br>பரதம் , கிராமிய நடனம்<br>கர்நாடக இசை மற்றும் கிராமியப் பாடல்கள்<br>கர்நாடிக் மற்றும் கிராமிய இசை |
| படைப்பாற்றல் கலை | ஓவியம், சிற்பம், கைவினை |
| படைப்பாற்றல் எழுத்து | கதை, கவிதை, கட்டுரை, உரைவீச்சு. கையெழுத்து |
| அறிவியல் | வினாடி வினா, கட்டுரை, மாதிரி செய்தல், கலந்துரையாடல், விளக்கவுரை |

**ஆ) போட்டி நிலைகள்** : மண்டல அளவில் மற்றும் மாநில அளவில்

**இ) மண்டல அளவிலான போட்டிகள்** : போட்டிகளில் பங்குபெறும் பள்ளிகள் மற்றும் ஜவகர் சிறுவர் இல்லங்கள் ஒவ்வொன்றும்10குழந்தைகள் வரை அதாவது நிகழ்கலை-5 , கலை-3, எழுத்து-1, அறிவியல்-1 மண்டல அளவிலான போட்டிக்கு அனுப்பலாம். அதற்கு மேல் அனுப்புதல் கூடாது

பள்ளிகள் மற்றும் ஜவகர் சிறுவர் இல்ல பொறுப்பாளர்கள் குழந்தைகளைத் தேர்ந்தெடுத்து மண்டல அளவிலான போட்டிக்கு அனுப்புதல் வேண்டும். படைப்பாற்றல் நிகழ்கலை, படைப்பாற்றல் கலை, படைப்பாற்றல் எழுத்து மற்றும் அறிவியல் பிரிவுகளில் போட்டியிடும் குழந்தைகள் அதிலுள்ள உட்பிரிவுகள் அனைத்திலும் பங்குபெற வேண்டும். ஒரு குழந்தையை ஒரு விருதுக்கான களத்திற்கு மட்டுமே தேர்வு செய்து அனுப்புதல் வேண்டும்.

## மண்டல அளவிலான போட்டிகள்

புதுச்சேரியில் கொம்யூன் வாரியாக கீழ்க்கண்ட இடங்களில் 28.01.2023 சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் போட்டிகள் நடை பெறும்.

| கொம்யூன் | மையம் |
|---|---|
| பாகூர், அரியாங்குப்பம் | அரசு உயர் நிலைப்பள்ளி. அரியாங்குப்பம், புதுச்சேரி. |
| நெட்டப்பாக்கம், மண்ணாடிப்பட்டு வில்லியனூர் | அரசு பெண்கள் நடு நிலைப்பள்ளி, வில்லியனூார் . |
| உழவர்கரை நகராட்சி | சேக்கிழார் அரசு உயர்நிலைப்பள்ளி , தட்டாஞ்சாவடி, புதுச்சேரி. |
| புதுச்சேரி நகராட்சி | சவரிராயலு நாயகர் அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி. நீடராஜப்பர் வீதி, புதுச்சேரி.1 |

மேற்கண்ட பள்ளிகளின் முதல்வர்கள் / தலைமையாசிரியர்கள் போட்டிகளை நடத்துவர். அந்தந்த துறையைச் சார்ந்த வல்லுநர்கள் நடுவர்களாக இருந்து மதிப்பெண்களை வழங்கி வெற்றி பெற்றவர்களை அறிவிப்பர். நடுவர்கள் தீர்ப்பே இறுதியானது.

## மாநில அளவிலான போட்டிகள்

மண்டல அளவில் தேர்ந்தெடுக்கப்படும் குழந்தைகள் புதுச்சேரி ஜவகர் சிறுவர் இல்லத்தில் 08 & 09.02.2023 ஆகிய தேதிகளில் நடைபெறும் மாநில அளவிலான போட்டிகளில் பங்குபெற வேண்டும்.

## பொது விதிகள்

1. போட்டிகளின் போது பெற்றோர், ஆசிரியர் உடனிருக்க அனுமதி இல்லை.
2. மண்டல அளவிலான போட்டிகளுக்குரிய பொருட்களை குழந்தைகளே கொண்டு வருதல் வேண்டும். ஓவியப் பிரிவின் குழந்தைகள் A4 அளவிலான வரைதாள் மூன்றும், வண்ண மெழுகு, எழுதுகோல், நீர் வண்ணம் (Wax Crayan, Watercolour, Charcoal Pencil) போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும். அறிவியல், கைவினைப் பிரிவிற்கு வரும் குழந்தைகள் எவ்விதமான ஆயத்தப் பொருட்களையும் (Pre-made / Readymade) ஏற்கனவே செய்து கொணர்தல் கூடாது.
3. மாநில அளவிலான போட்டிகளுக்கு அனைத்துப் பொருட்களையும் ஜவகர் சிறுவர் இல்லமே வழங்கும்.
4. நடனத்திற்கு பரதநாட்டிய ஒப்பனை, உடை, ஒலி நாடா ( 3 முதல் 5 நிமிடம் வரை) இவற்றோடு குழந்தைகள் வருதல் வேண்டும். கிராமிய நடனத்திற்குரிய நடன உடை, ஒலி நாடா (3 முதல் 5 நிமிடம் வரை)இருத்தல் வேண்டும். திரைப்படத்தாக்கம் எந்நிலையிலும் இருத்தல் கூடாது. மின்னனுவியல் இசைக்கருவி (Electronic Instruments) Keyboard, Guitar, Western Drums மீட்டுதல் கூடாது.
5. ஜவகர் சிறுவர் சிறு இல்ல கிராமபுற குழந்தைகளாக இருப்பின் விண்ணப்பப் படிவம் கொடுக்கும் போது குழந்தையின் ஆதார் அட்டை நகல் அல்லது அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் பயில்வதற்கான சான்றிதழ் ( Study Certificate)அல்லது வட்டாச்சியரின் குடியுரிமை சான்றிதழ் இதில் எதாவது ஒன்றுடன் சமர்ப்பிக்கவும். அவ்வாறு தவறும் பட்சத்தில் கிராம புற ஒதுக்கீட்டில் அவர்களை பரிசிலிக்க முடியாது.
6. இதனுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தில் அனைத்து விபரங்களையும் பூர்த்தி செய்து முதல்வர் / தலைமையாசிரியர் ஒப்பத்துடன் மற்றும் ஒப்புகை கடிதத்துடன் ( Covering Letter) 19.01.2023வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்குள் பள்ளிகள் மற்றும் ஜவகர் சிறுவர் இல்ல மூலமாக மட்டுமே விண்ணப்பங்கள் புதுச்சேரி ஜவகர் சிறுவர் இல்லத்தில் சேர்ப்பித்தல் வேண்டும்.மேலும் பெற்றோர் அல்லது குழந்தைகள் மூலமாக வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது. 19.01.2023 வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு மேல் வரும் விண்ணப்பங்கள் ஏற்க படாது. அனைத்து முதல்வர்கள் மற்றும் தலைமையாசிரியர்களின் முழு ஒத்துழைப்பும் வேண்டப்படுகிறது. மேலும் விபரங்களுக்கு ஜவகர் சிறுவர் இல்ல தொலைபேசி எண் 0413-2225751-ல் தொடர்பு கொள்ளலாம்.

(P. பூபதி )

துணை இயக்குநர்(தொடக்கக் கல்வி)

பெறுநர்:

1. துணை இயக்குநர் (பெ.க.), புதுச்சேரி ,
2. முதன்மைக் கல்வி அலுவலர், புதுச்சேரி
3. அனைத்து அரசு மற்றும் தனியார் தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி முதல்வர்கள் மற்றும் தலைமையாசிரியர்கள் (உரிய வழியாக)
4. பள்ளித்துணை ஆய்வாளர்கள்,
5. பொறுப்பாளர்கள், ஜவகர் சிறுவர் சிறு இல்லங்கள் (உரிய வழியாக)
6. பள்ளிக் கல்வி இயக்குநரின் தனி உதவியாளர்

பணிந்தளிப்புப் படி பெறுநர் : 1. இணை இயக்குநர், பள்ளிக்கல்வி இயக்ககம், புதுச்சேரி.

# புதுச்சேரி அரசு பள்ளிக் கல்வி இயக்ககம்,

## ஜவகர் சிறுவர் இல்லம்

## மாநில சிறந்த படைப்பாளிக் குழந்தை விருது - 2021

## விண்ணப்பப் படிவம்

கொம்யூன்/ நகராட்சி

1. பெயர் (தமிழிலும் ஆங்கிலத்திலும்) :
2. இனம் : ஆண் / பெண்
3. பள்ளியின் பெயர் மற்றும் வகுப்பு :
4. பிறந்த தேதி :
5. 1.04.2021 அன்று வயது : ஆண்டு ◯ மாதம் ◯
   (01.04.2005 முதல் 01.04.2012 வரை பிறந்தவராக இருத்தல் வேண்டும்)
6. பிரிவு : பொது ◯ அட்டவணை ◯ ஊனமுற்றோர் ◯
7. பங்கேற்கும் கலைப்பிரிவு

| கலை | இசை (வாய்ப்பாட்டு) | இசைக்கருவி | நடனம் | அறிவியல் | படைப்பாற்றல் எழுத்து |
|---|---|---|---|---|---|
| | | | | | |

☆ **'கலை'** என்பது ஓவியம், கைவினை, சிற்பம் ஆகிய அனைத்தையும் கொண்டது.

☆ **'அறிவியல்'** என்பது வினாடி வினா, கட்டுரை, மாதிரிசெய்தல், கலந்துரையாடல், விளக்கவுரை ஆகிய அனைத்தையும் கொண்டது.

☆ **'இசை'** என்பது கர்நாடக இசை மற்றும் கிராமிய பாடல்கள்

☆ **'நடனம்'** என்பது பரதம் மற்றும் கிராமிய நடனம்

☆ **'இசைக்கருவி'** என்பது மேற்கத்திய கருவிகள் (Keyboard, Guitar, Western Drums) நீங்கலாக பிற கருவிகள் ( தனித்திறன்)

☆ **'படைப்பாற்றல் எழுத்து'** என்பது கதை, கவிதை, கட்டுரை, உரைவீச்சு. கையெழுத்து ஆகிய அனைத்தையும் கொண்டது

☆ **அட்டவணை மற்றும் ஊனமுற்றோர்** பிரிவுக்கான சான்றிதழ் இருப்பின் அவற்றை இணைக்கவும்

1. கடந்த ஆண்டுகளில் இப்போட்டிகளில் பங்கேற்ற விபரங்கள்:

9. அ) தாய் / தந்தை பெயர் :
   ஆ) பணி :
   இ) ஆண்டு வருமானம் :
10. அ) வீட்டு முகவரி :
    ஆ) தொலைபேசி எண் :
    இ) கை பேசி எண் :

பள்ளி முத்திரை

பள்ளித்தலைமையின் ஒப்பம்

பெயர்

முகவரி மற்றும் தொ.எண் :